# பத்திரிக்கை செய்தி

காரைக்கால் நகரப்பகுதியில் வசிக்கும் மக்களின் குடிநீர் தேவையை கருத்தில் கொண்டு காரைக்கால் இராஜாத்தி நகரில் விரிவுப்படுத்தப்பட்ட குடிநீர்த்திட்டம் ரூ. 49.45 கோடி மதிப்பீட்டில் தயார் செய்து ஒப்பந்த புள்ளிகள் இறுதி செய்யப்பட்டு, இந்த திட்டத்திற்கான பூமி பூஜை ஜனவரி மாதம் 10-ஆம் தேதி புதன்கிழமை காலை 9.30 மணியளவில் மாண்புமிகு முதலமைச்சர் திரு. V. நாராயணசாமி அவர்களால் அடிக்கல் நாட்டபட்டது. நிகழ்ச்சியில் மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் திரு. A.நமச்சிவாயம், மாண்புமிகு வேளாண் அமைச்சர் திரு. R. கமலக்கண்ணன் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. PRN. திருமுருகன், திருமதி A.கீதாஆனந்தன் திரு. K.A.U. அசனா, திருமதி சந்திரபிரியங்கா தலைமைச் செயலர் திரு. அஸ்வனி குமார், வளர்ச்சி ஆணையர் மற்றும் செயலர் (பொதுப்பணி) திரு. A.அன்பரசு, மாவட்ட ஆட்சியர் திரு.R.கேசவன், பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர் திரு.V.சண்முகசுந்தரம், கண்காணிப்பு பொறியாளர் திரு. S.சேகர், நிர்வாக பொறியாளர் திரு. A.ராஜசேகரன், உதவிப்பொறியாளர் திரு. G.பக்கிரிசாமி, மற்றும் திரளான பொது மக்கள் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தார்கள்.

இப்பணிகள் 15 மாத காலக்கொடுவிற்குள் முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் காரைக்கால் மத்திய நகரப்பகுதியில் வசிக்கும் மக்கள் 1,05,000 பேர் குடிநீர் தங்கு தடையின்றி கிடைக்கப்பெற்று பயன்பெறுவர்கள்.

9-1-2018
K. GOPAL SAMY
JE, PWD, KKL